செ. கு. எண்: 80 நாள்: 30.05.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 30.5.2018

பழம்பெரும் திரைப்பட இயக்குநரும், தயாரிப்பாளருமான திரு. முக்தா சீனிவாசன் அவர்கள் நேற்று (29.5.2018) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து வருத்தம் அடைந்தேன்.

திரு.முக்தா சீனிவாசன் அவர்கள் 'முதலாளி', 'மொம்மலாட்டம்', 'அந்தமான் காதலி', 'கீழ் வானம் சிவக்கும்', 'பரிட்சைக்கு நேரமாச்சு' உள்ளிட்ட 60–க்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கியுள்ளார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடித்த 'சூரியகாந்தி' திரைப்படத்தை இயக்கிய பெருமை திரு. முக்தா சீனிவாசன் அவர்களைச் சாரும். மேலும், பல திரைப்படங்களையும் திரு. முக்தா சீனிவாசன் அவர்கள் தயாரித்துள்ளார்.

திரு. முக்தா சீனிவாசன் அவர்கள் இயக்குநர், தயாரிப்பாளர், வசனகர்த்தா, எழுத்தாளர் போன்ற பன்முகத் திறமை கொண்டவர். அவர் திரைப்படத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக தேசிய விருது, தமிழ்நாடு அரசின் மாநில விருதுகள் போன்ற பல்வேறு விருதுகளை பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

அனைவரிடமும் அன்பாக பழகக்கூடியவரும், திரைத்துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவருமான திரு. முக்தா சீனிவாசன் அவர்களின் மறைவு, தமிழ் திரையுலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.

திரு. முக்தா சீனிவாசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்ினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**